DINAKARAN 18 AUG 09

# கல்வியுடன் கலாச்சாரமும் அவசியம்

## சத்குரு ஜக்கிவாசுதேவ் அறிவுறுத்தல்

நாகர்கோவில், ஆக.18: கல்வியுடன் கலாச்சாரமும் அவசியம் என்று சத்குரு ஜக்கிவாசுதேவ் அறிவுறுத்தி பேசினார்.

தேரூரை அடுத்த கொரண்டியில் உள்ள ஈஷா வித்யாலயா மெட்ரிக் பள்ளியில் ஈஷா மைய நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ் வருகை தின விழா நேற்று காலை நடைபெற்றது. இதனை முன்னிட்டு காலை பள்ளி குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பின்னர் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிக்கு பள்ளி முதல்வர் வைஷ்லாகுமாரி தலைமை வகித்தார். ஈஷா வித்யா திட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கட் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் சத்குரு ஜக்கிவாசுதேவ் பேசியதாவது:

300 ஆண்டுகளுக்கு முன்பு அனைவருக்கும் கல்வி கிடைக்காத நிலை இருந்தது. அதன்பின்னர் மரத்தடிகளில் கல்வி கற்பிக்கப்பட்டது. மனிதர்களை நன்றாக வாழவைக்கத்தான் கல்வி. வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்க அல்ல.

இந்தியாவை சுற்றிவந்த பிரிட்டிஷ் கவர்னர் நமது கல்வி மற்றும் ஆன்மிகத்தை சிதைத்தால் அடிமைப்படுத்துவது எளிது என்று கடிதம் எழுதினார். நாடு முன்னேற கல்வி அவசியம்.

நகரம் மட்டுமின்றி கிராமப்புறங்களிலும் தரமான கல்வி கிடைக்க வேண்டும். கடந்த 50 ஆண்டுகால கல்வியில் நமது கலாச்சாரம் இல்லை. கல்வி உறுதி படும்போது கலாச்சாரமும் உறுதிபட வேண்டும்.

முன்பு நமது கலாச்சாரம், கல்வி, ஆன்மிகம் ஆகியவற்றை பார்த்து வெளிநாட்டினர் இந்தியாவிற்கு ஆர்வத்துடன் வந்தனர். தற்போது இங்கிருந்து அமெரிக்காவிற்கு செல்கின்றனர். இனம், மதம், மொழி, உணவு, பாஷை என வேற்றுமையில் ஒற்றுமையுடன் இந்தியா இருப்பதற்கு அடிப்படை காரணம் கலாச்சாரம்.

கிராமப்புறங்களில் தரமானகல்வி கிடைக்க ஈஷா நடவடிக்கை எடுத்துள்ளது. இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகளில் அனைத்து தாலுகாக்களிலும் ஈஷா வித்யாலயா தொடங்க வேண்டும். பள்ளிகள் கட்டுவது மரம் நடுவது போன்றது. நாம் மரம் வைத்தால் பயன்பெறுவது யாராகவும் இருக்கலாம்.

இந்த உணர்வு குழந்தைகளுக்கு ஊட்டப்படுவது அவசியம். நமக்காக யாரோ நன்மை செய்கின்றனர் என்ற எண்ணம் குழந்தைகளுக்கு வரும்போது அவர்கள் நல்லவர்களாக வருவார்கள். யாரையும் ஏமாற்றாமல், வன்முறைக்கு உட்படுத்தாமல் பிறருக்கு உதவி செய்யவேண்டும், அன்பு காட்டவேண்டும் என்ற எண்ணம் உருவாக செய்யவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து 197 மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையை அவர் வழங்கினார்.



நாகர்கோவிலை அடுத்த தேரூர் கொரண்டியில் உள்ள ஈஷா வித்யாலயா மெட்ரிக் பள்ளியில் நடந்த விழாவில் ஈஷா மைய நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ் பேசினார்.